
# திராவிட சினிமா

35

**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்





## சாதி மறுத்த காதல் : தாய் மகளுக்குக் கட்டிய தாலி!

‘இந்தத் திரைப்படத்தின் தலைப்பே பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியது’ என்கிறார் திரைப்பட விமர்சகர் ராண்டார் கை. சுயமரியாதைக் கட்சியின் முக்கியமான கொள்கை நிலைப்பாடுகளில் ஒன்றாக ‘தாலி கட்டாத’ திருமணம் இருக்க, அண்ணாவின் பெயர் தாங்கிய திரைப்படத்தின் தலைப்பு இப்படியிருந்தது முரணாகக் கருதப்பட்டதில் ஆச்சர்யமில்லை.

திரைப்படத்தில் நடக்கும் திருமணம் சுயமரியாதைப் பதிவுத் திருமணம்தான். சாதி மறுப்புத் திருமணத்தைத் தடை செய்து விடுவதைத் தவிர்க்க, இந்த நடவடிக்கை. ஆனால், சதிகளில் சிக்கி சிதறுண்டு போகும்போது, கணவனிடமிருந்து பிரிந்த நிலையில் கர்ப்பவதியாக ஆகிவிட்ட மகளுக்கு ஊராரின் அவச் சொல்லைத் தவிர்க்க, தாயே தாலி கட்டி விடுகிறாள்.

அண்ணாவின் கதைகளைத் திரைப்படமாக்குவது வெற்றிக்கு வழிவகுக்கும் என்ற உறுதி, இந்த வித உத்திகளையும் கையாளத் தவறவில்லை.

### அண்ணாவின் நாடக பங்களிப்பு

அண்ணா அரசியல் களத்தில் வெகுவேகமாக தனக்கெனத் தனித் தடம் பதித்து செயல்பட்ட காலங்களில் திரைப்பட முயற்சிகளில் பங்கேற்க இயலவில்லை. கட்சிப் பணிகள் அவரைக் கட்டிப் போட்டுவிட்டன. அதிக வசதியற்ற சூழலில் தினசரி தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பயணம் செய்து கூட்டங்களில், மாநாடுகளில் பங்கேற்ற நிலையில், கலைத்துறைக்கான அவரது நேரடிப் பங்களிப்பு அவரது நாடகங்களில் நடிப்பது என்றானது.

இந்த நிலையில் ஐம்பதுகளின் இறுதியிலும் அறுபதுகளின் தொடக்கத்திலும் அண்ணாவின் பெயர் தாங்கி மூன்று படங்கள் வெளிவந்தன. அவற்றில் ‘தாய் மகளுக்குக் கட்டிய தாலி’, 1959-ஆம் ஆண்டில் வெளியானது. எம்.ஜி.ஆர், ஜமுனா, ராஜசுலோச்சனா, கே.ஏ.தங்கவேலு, கண்ணாம்பா, எம்.ஜி.சக்கரபாணி ஆகியோர் நடிப்பில் ஆர்.சந்திரன் அவர்கள் ஒளிப்பதிவு செய்து இயக்கியிருந்தார்.

இசையை டி.ஆர்.பாப்பா அவர்களும், பாடல்களை உடுமலை நாராயணகவி, கண்ணதாசன், மருதகாசி ஆகியோர் எழுதியிருந்தனர். அண்ணாவின் கதைக்கு திரைக்கதை வசனம் எழுதியவர் இராம. அரங்கண்ணல். திரைத்துறையில் பின்னாளில் தனக்கெனத் தடம் பதித்த தயாரிப்பாளர். அண்ணாவுக்கு மிக நெருக்கமாக இருந்ததோடு, அவரது ‘திராவிட நாடு’ இதழில் தொடர்ந்து எழுதி வந்தவர். திருவாரூர்க்காரரான அரங்கண்ணல், கலைஞரின் வகுப்பறைத் தோழரும்கூட.



### திரைப்படங்களைப் பரப்புரையாக்கியதா தி.மு.க.?

உள்ளூர் ‘ஒலக சினிமா’ உபாசகர்கள், திராவிட இயக்கம், குறிப்பாக தி.மு.க திரைப்படங்களை பரப்புரை சாதனமாக ஆக்கிவிட்டதாகப் புலம்பும் போது, அவர்களின் உன்னத சினிமாவைத் துறந்து, ஏதோ தமிழ் சினிமாவில் சமூக விரோத நச்சுக் கருத்துகளைப் பரப்பிவிட்டார்கள் என்பதான பதற்றம் காணப்படும்.

அவர்களின் ‘உன்னதத்தில்’ சாதி என்பதோ அதன் மேல்கீழ் கட்டமைப்பு என்பதோ ‘மறைபொருளாக’ கூட இராது. அண்ணாவின் கதைக்களங்களில் தவறாமல் இடம் பெறுவது ‘சாதி மேட்டிமை’ என்பதும் அதன் விளைவுகளும்தான். அதைவிட கவனமாக, ‘முற்போக்காளர்கள்’ (குறிப்பாக உயர்சாதிப் பார்ப்பனர்கள்) பார்க்க வேண்டியது அவரது களங்களில் சாதிய வன்முறையாளர்களாகச் சித்தரிக்கப்படுபவர்கள் பார்ப்பனரல்லாத உயர்சாதியினர் மற்றும் இப்போதைய ஆதிக்க சாதிகளும் என்பதே.

பட்டியலின ஆய்வாள அறிஞர்களும் இந்தப் போக்கைக் கருதிப் பார்த்தால் கொஞ்சம் புரிந்து கொள்ள உதவலாம். குறிப்பாக சாதிய மேல்கீழ் அமைப்பினை நிலைநிறுத்தி, அது தொடர்பிலான வன்முறைக்குக் காரணர்களான ஆதிக்க சாதியினரைக் கண்டிக்காமல் அப்பாவிப் பார்ப்பனர்கள் மீது பாய்கிறார்கள் என காய்வோர் கவனிக்கலாம். நிற்க.

### சாதி மறுப்பு காதல் திருமணம்

இந்தப் படத்தின் திரைக்கதையமைப்பினை எம்.ஜி.ராமச்சந்திரன் பெருமளவில் தனது போக்குக்கு வளைத்திருக்கிறார் என்பது, வெளிப்படையாகத் தெரிகிறது. உன்னத சினிமாவினர் பதறும் கூறுகளான திராவிட சினிமாக் கூறுகள் இங்கேயும் உண்டு.

இரண்டு பெண் குழந்தைகள் நடனமாடும் தொடக்கக் காட்சிப் பாடலில் ‘பறந்து பறந்து திரியும் பறவையைப் பாரு.... அங்கே சாதிச் சண்டை இல்லை, மதச் சண்டை இல்லை ..... கஷ்டங்களுக்காக கடவுளை வணங்கி கண்ணீர் விடுவதில்லை‘ எனும் ‘தீங்கு விளைவிக்கும்’ கருத்துகள் உண்டு. கூடுதலாக ‘ஒன்றல்ல இரண்டல்ல ஒப்புமை இல்லாத தமிழ்நாட்டில் .... தேவைக்கு வள்ளலாரின் சமரச சன்மார்க்கம்’ வேறு.

இந்த சமகால கதைக்களத்தில் மேல் சாதி எனப்படும் பண்ணையார் மகன், கீழ்சாதி அல்லது சமமற்ற சாதிப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்வதில் எழும் சிக்கலே பிரதானம். கூடுதல் சாதிய வன்முறைப் பணம், வட்டி, சொத்துப் பறிமுதல் என்பவை. வாரிசு சொத்துக்காக நடக்கும் சதி, ஏமாற்று வேலை என்பவையும் உண்டு. 1957-க்குப் பின்னரான திரைப்படத்தில் தேர்தல் பற்றிய விமர்சனங்களும் நிறைய.

### சுயமரியாதையும் மானமுமே கடவுள்!

திரைப்படம் எம்.ஜி.ஆருக்கானதாக மாறுவது, தனது அப்பாவின் சொத்துகளை ஏழை மக்களுக்கு எழுதித் தரும் நாயகன் கனகசுந்தரம் திட்டத்தோடு நின்றுவிடுகிறது. சாதி மறுப்புத் திருமணத்தை மையமாகக் கொண்ட திரைப்படத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் அவர்களது சாதி இழிவிலிருந்து விடுதலை பெறுவது குறித்த நடவடிக்கைகளில் நாயகன் செயல்பாடு இல்லை. மாறாக, ‘வள்ளல்’ ஆக வாரி வழங்குவதே பிரதானமான பகுதியாகிறது. அதன் காரணமாய் ‘பைத்தியம்’ பட்டமளிக்கப்பட்டு மனநல விடுதியில் அடைக்கப்படுகிறான்.

இந்தப் பணம் குறித்த அலட்சியம் அல்லது அதனை முக்கியத்துவமானதாகக் கருதாமை, பொதுப்புத்தியில் ‘பைத்தியக்காரத்தனமாக’ கருதப்படுவது ‘திராவிட சினிமாக்களில்’ திரும்பத் திரும்ப பேசுபொருளாகிறது. இந்தத் திரைப்படத்திலும் கூட பண்ணையார்கள் தேர்தலில் யார் யாரோ நிற்கிறார்கள், அவர்களையும் இளைஞர்கள் ஆதரிக்கிறார்கள் என்ற திராவிட சாமானியர்கள் அரசியல் விமர்சனத்துக்கு உள்ளாகிறது. அனைவருக்கும் வாக்குரிமைதான் இதற்குக் காரணம் என்பதும் பேசுபொருளாகிறது. அதன் மறுபக்கமாக பொதுநலனுக்காக உழைப்பவர்களை, வறுமை பீடித்து விடுகிறது என்ற கருத்து பேசப்படுகிறது.

திரைப்படத்தின் பல காட்சிகளில் கருப்புச் சட்டையோடு வலம் வருகிறார் நாயகன் எம்.ஜி.ஆர். ஆனால், விபரீதமாக பக்தி தேவைதான் என்கிறார். ஒன்றே கடவுள் என்ற கொள்கையை ‘பக்திக்கு’ சார்பாக்குகிறார். எம்.ஜி.ஆரின் பின்னாள் பிரபல பாடலான ‘புத்தன், ஏசு முதல் காந்தி வரை’ எனும் வரிகள் இதில் வசனமாகப் பேசப்படுகின்றது . கருப்புச் சட்டை போட்டபடி பெரியாரை விடுத்து, காந்தியாரைப் பேசுகிறார் எம்.ஜி.ஆர். ஒருவகையில் தி.க-தி.மு.க முரணைச் சாதகமாக்கிக் கொண்டவர் புரட்சி நடிகர்.

அவரது திரைப்படங்களில் சுயமரியாதை, பகுத்தறிவு போன்ற கருத்துகள் பாடல் காட்சிகளின் பகுதியாகவே இருக்கும். ஆனால், பெரியார் படமோ, கடவுள் மறுப்புக் கொள்கையின் சாயலோ கூட இருக்காது. ஆனால், தினசரியாக தி.க.வினருடன் பத்திரிக்கை மற்றும் மேடைப் பேச்சுகள் வழியாக, தான் நடத்திய மோதலையும் கடந்து அதே காலத்தில் சாக்ரடீஸை ‘கிரேக்கத்துப் பெரியாரே’ எனப் போற்றினார் கலைஞர் (ராஜா ராணி திரைப்படம்). எம்.ஜி.ஆரின் சமரசத்தை மீறி, வசனம் எழுதிய அரங்கண்ணல், கண்ணம்பாவை, ‘சுயமரியாதையும் மானமும்தான் எங்கள் சொத்து. தன்னம்பிக்கை எங்கள் கடவுள்’ எனப் பேச வைக்கிறார்.

...படம் விரியும்

## இயற்கைக்குத் திரும்ப முடியுமா?

இயற்கை வாழ்க்கை முறை, இயற்கை மருத்துவம், இயற்கை விவசாயம் என்பதையெல்லாம் அடிக்கடி சிலாகித்துச் சொல்கிறார்கள். இதில் நல்ல அம்சங்கள் இருந்தாலும் குறைகளும் இருக்கின்றன. இயற்கை கருணையானதோ, முழுமையானதோ கிடையாது. புயல், மழை, வெள்ளம் எல்லாமே இயற்கைதான். பல்வேறு கிருமிகள், நோய்கள் எல்லாமே இயற்கைதான்.

இயற்கை வழிமுறைக்குத் திரும்புவது என்பது இனிமையான பாதை அல்ல. அது முரட்டுத்தனமானது. ‘Survival of the fittest’ என்பதை ஒவ்வொரு நொடியும் சொல்லிக் கொண்டே இருக்கும்.

இயற்கை அத்தனை பெர்ஃபெக்ட்டானதில்லை என்பதற்கு, பிரசவத்தையே உதாரணம் காட்டலாம். மனிதமூளை அபார வளர்ச்சி அடைந்ததால் பரிணாம ரீதியில், குழந்தையின் தலை வளர்ச்சி அடையும் வேகத்துக்குப் பெண்ணின் இடுப்பெலும்பு போதிய வேகத்தில் மாறுதல் அடையவில்லை.

காட்டிலே பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த பழங்குடிப் பெண் இயற்கை முறையில் சுகமாகப் பிரசவிக்கலாம். ஆனால், நல்ல சத்துள்ள உணவு உண்டு அந்த அளவு உடலுழைப்பு இல்லாத ஒரு சாஃப்ட்வேர் துறைப் பெணணுக்கு இயற்கைப் பிரசவம் சுகப்பிரசவமாக இருக்காது.

வாழ்க்கை முறை மாற்றங்கள், இயற்கை முறை என்பதை எல்லாம் அறிவியலோடு இணைந்து செய்ய வேண்டும். வாழ்க்கை முறை மாற்றங்கள், உடற்பயிற்சியால் உடலில் விளையும் நன்மைகள், உணவில் உள்ள சத்துக்கள் இவற்றை எல்லாம் கண்டறிந்து சொன்னதே அறிவியல்தான்.

அறிவியலின் பெயரால் முறைகேடுகள் நடந்தால், நாம் எதிர்க்க வேண்டியது முறைகேடுகளைத்தான். அறிவியலை அல்ல.

**-டாக்டர் ஜி.ராமானுஜம்**
**ஃபேஸ்புக் பதிவு.**

## ஃப்ளாஷ்பேக்



### அண்ணா அறிவாலயத்துக்கு நிதி!



சிவபாலன்

1986-ஆம் ஆண்டு திருப்பூர், டவுன் ஹாலில் தி.மு.க பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றைய கோவை மாவட்டச் செயலாளர் மு.கண்ணப்பன் தலைமையில், திருப்பூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சு.துரைசாமி அவர்கள் முன்னிலையில் ‘அண்ணா அறிவாலயம்’ கட்டட நிதியாக ரூ. 3 லட்சத்து 33 ஆயிரத்து 33ஐ திருப்பூர் நகர தி.மு.க சார்பில் தலைவர் கலைஞர் அவர்களிடம் வழங்கினோம். இந்த நிகழ்ச்சியில், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். தலைவர் கலைஞர் பொதுக்கூட்ட மேடையில் எங்களைப் பாராட்டிய நிகழ்வை இன்றளவும் மறக்க முடியாது.

**-சு.சிவபாலன், நகர முன்னாள் பொறுப்பாளர், திருப்பூர்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணா நகரில் கலைஞர்!

**1980-ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்பட ஒன்பது மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. அதையடுத்து, 2.3.1980 அன்று, சென்னையில் பேரணி ஒன்றை அ.தி.மு.க நடத்தியது. தமிழ்நாடு முழுவதுமிருந்தும் வந்த தொண்டர்களால், அந்தப் பேரணியில் வன்முறைக்கு வித்திடப்பட்டது. அண்ணா சிலையில் இருந்து ஆயிரம் விளக்கு வரையிலான கடைகள் பெருத்த சேதமடைந்தன. அ.தி.மு.கவினருக்கும் காவல் துறையினருக்கும் இடையே அன்றைய தினம் பெரும் போரே நடைபெற்றது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 322




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131